பக்கங்கள் 20

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 14 சனிக்கிழமை 30.12.2023 அதிர்வு 152

## சி.ஐ.டி. எனக் கூறி கைவரிசை காட்டிய 3 இளைஞர்கள் கைது

(கி.வசந்தரூபன்)

சி.ஐ.டி. எனக் கூறி வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் திருட்டில் ஈடுபட்ட மூவர் வவுனியா

04▸




# ஆணைக்குழுக்களை அமைத்து

# எங்களை ஏமாற்றவே வேண்டாம்

## சர்வதேசமே புதிய வருடத்திலாவது நீதியை வழங்கு;

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்



(கி.வசந்தரூபன்)

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கருத்துத் தெரிவிக்கையில்,

04▸

# சுமத்திரா தீவில் நில நடுக்கம்!

## இலங்கைக்குச் சுனாமி அபாயம் இல்லை


இந்தியப் பெருங்கடலில் வடக்கு சுமத்ரா கடற்பகுதியில் இன்று ஏற்பட்ட நில நடுக்கத்தால் இலங்கைக்குச் சுனாமி அபாயம் ஏதும் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள கடலோரப்பகுதிகள் பாதுகாப்பாக உள்ளது என்றும் அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு சுமத்ரா தீவுகளை சுற்றியுள்ள கடலில் இன்று காலை 10.49 மணியளவில் 6.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதையடுத்துத் தாம் விடுக்கும் அறிவிப்புகள் தொடர்பில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே இலங்கைக்குச் சுனாமி அபாயம் இல்லை என்று அந்த மையம் பின்னர் அறிவித்துள்ளது.



# அமெரிக்கா, ரஷ்ய ஜனாதிபதிகளைவிட சிறந்த தலைவரே ரணில் விக்கிரமசிங்க

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர எம்.பி. புகழாரம்



“அமெரிக்கா, ரஷ்யா என்பன பெரிய நாடுகளாக இருக்கலாம். ஆனால் புடின், ஜோ பைடன் ஆகியோரை விடவும் சிறந்த தலைவர்தான் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரால் மட்டுமே இலங்கைக்குப் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“அனைவரும் ஒன்றிணைவோம் என ஜனாதிபதி தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றார். நாம் பிளவுபட்டு நின்றால்தான் வெளிநாட்டு சக்திகள் நாட்டுக்குள் நுழையும். அரசியல் கட்சிகள் மற்றும் இடதுசாரிகள் தேசிய ஒற்றுமைக்காக ஒன்றிணைய வேண்டும். அப்போது ஜனாதிபதியால் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

நாம் பிரிந்து நின்றால் நாடு விழும். நாட்டை நிர்வகிக்கக்கூடிய சிறந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதால் தான் நாம் அவர் பின்னால் நிற்கின்றோம்.

அமெரிக்க ஜனாதிபதி பைடன், ரஷ்யா ஜனாதிபதி புடின் ஆகியோரை விடவும் ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர் என நான் குறிப்பிட்டிருந்தேன். ஆம். புடின் 1999 இல்தான் அரசியலுக்கு வந்தார். நாடுகள் பெரிதாக இருக்கலாம், சொத்துக்கள் இருக்கலாம். பொருளாதார ரீதியில் முன்னேறி இருக்கலாம். ஆனால், எமது நாட்டுத் தலைவருடன் ஒப்பிட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்லும்போது, அவர் ஜனாதிபதி ஆவார் என கூறினோம். மறுநாள் எனக்குப் பைத்தியம் என்றார்கள். நடந்தது என்ன? ஏனெனில் ரணிலின் நகர்வுகள் எமக்குத் தெரியும்.”

– என்றார்.

# யாழ். ஆனைப்பந்தியில் விஜயகாந்துக்கு அஞ்சலி நிகழ்வு




(எஸ்.நிதர்ஷன்)

மறைந்த நடிகரும் தமிழக அரசியல்வாதியுமான கப்டன் விஜயகாந்த்துக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் மறைந்த விஜயகாந்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் திருவுருவப் படத்திற்கு மெழுகுவர்த்திகளால் தீபங்களும் ஏற்றப்பட்டு நினைவுரைகளும் இடம்பெற்றன.



# இயற்கை அனர்த்தம் பாதித்த காரைதீவு மக்களுக்கு உதவி

(எம்.எம்.றம்ஸீன்)

கடந்த் செப்ரெம்பர் மாதம் வீசிய கடும் காற்று மற்றும் மழை காரணமாக காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காரைதீவு - 08 மற்றும் மாவடிப் பள்ளி மேற்கு ஆகிய கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளில் பகுதியளவில் வீடு பாதிக்கப்பட்ட இரு பயனாளிகளுக்கு முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்பட் டுள்ளது.

முதற்கட்டமாக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் காரைதீவு பிரதேச செயலர் சிவஞானம் ஜெகராஜ னால் காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

# திருகோணமலை மாணவர்களுக்கு உயிர்காப்புத் தொடர்பில் பயிற்சிகள்

## கடற்படையின் உயிர்க்காப்பு பிரிவினர் வழங்கினர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மைக்காலமாக நீரில் மூழ்கி இறப்பவர்களில் அதிகமானவர்கள் பாடசாலை மாணவர்களும் இளைஞர்க ளுமாகவே இருக்கின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு திரு கோணமலை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா வின் ஆலோசனைக்கமைய திரு கோண மலை பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.ஜீ.டபிள்யூ. லக்மால் தலைமையிலான பொலிஸ் தற்காப்பு படையினர் மாணவர்களுக்குப் பயிற்சி களை வழங்கி வருகின்ற னர்.

இதுவரை திருகோணமலை பிராந்தி யத்தில் 2000 மூவின பாடசாலை மாணவர்களுக்கு உயிர்க்காப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தற்காப்புப் படையினர் தெரி வித்துள்ளனர்.






# ‘2024’ தீர்வு காண்பதற்கான ஆண்டாக இருக்க வேண்டும்

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி வலியுறுத்து

“2024 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் உறுதியுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். இது மேலும் இழுபட்டுச் செல்ல முடியாது.”

– இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சுகு சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

“1983 இனப் பிரச்சினை தீவிரமடைந்ததற்கான ஓர் ஆரம்ப எல்லையாக வைத்தால் 40 வருடங்கள் கடந்தாயிற்று. 25 வருடங்கள் மூச்சு முட்டும் யுத்தம்.

ஜி.பார்த்தசாரதி வருகை, வட்டமேசை மாநாடு, திம்பு பேச்சு, இந்திய – இலங்கை ஒப்பந்தம், நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுகள் என முடிவற்ற இழுபறி. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை இதய சுத்தியுடன் முழுமையாக நடைமுறைப்படுத்த முற்பட்டிருந்தால் இன்று அதிகாரப் பகிர்வு கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும். அது நாடளாவிய அளவிலும், மாகாண மட்டத்திலும் சமூக, பொருளாதார அபிவிருத்திகளில் உறுதியான பாரிய பங்களிப்பை வழங்கி இருக்கும். அரகலய போன்ற எழுச்சி நடத்துவதற்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

இன்றைய சமூக, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியுமா என்று சந்தேகம் சமூகத்தில் எல்லா மட்டத்திலும் நிலவுகின்றது. எனவே, மாகாண மட்டத்தில் 13 ஆவது திருத்தத்தின் அதிகாரங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

2024 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் உறுதியுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். இது மேலும் இழுபட்டுச் செல்ல முடியாது. இலங்கையின் சமூகங்களும் இந்த நாடும் இனி தாங்க முடியாது.

சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்கள் நெருக்கமாக ஐக்கியமாகச் செயற்படுவதற்கான ஏது நிலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.” – என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சி.ஐ.டி. எனக்கூறி...**

குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டனர்.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடப் பகுதியில் நேற்று நின்ற மூன்று இளைஞர்கள் அந்த வீதியால் மோட்டர் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரை மறித்து தாம் சி.ஐ.டி எனக் கூறி, தம்மைத் தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியில் இறக்கி விடுமாறு கூறினர். இதனை நம்பிய அந்த இளைஞர் அவர்களை ஏற்றிக்கொண்டு தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியால் சென்றபோது மேற்படி இளைஞரிடம் இருந்த கைத்தொலைபேசியைப் பறித்துக்கொண்டு மூன்று இளைஞர்களும் தப்பிச் சென்றனர்.

இதையடுத்து, அந்த மூவரும் மடுகந்த பகுதிக்குச் சென்று அங்கு வீதியால் சென்ற பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வவுனியா தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜெயதிலகவின் தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திஸாநாயக்க, ஜெயதுங்க, உபாலி மற்றும் சியான் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் விரைந்து விசாரணைகளை ஆரம்பித்தனர். இதன்போது குறித்த மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து திருடப்பட்ட சங்கிலி மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது வவுனியாவில் திருடப்பட்ட 2 மோட்டர் சைக்கிள்கள் மீட்கப்பட்டதுடன், கிளிநொச்சியில் திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் ஒன்றும், லப்டொப் ஒன்றும், கைத்தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவருமே கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் திருடப்பட்ட பொருள்கள் கிளிநொச்சி பொலிஸாரிடம் வவுனியா பொலிஸார் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின் திருடப்பட்ட பொருள்களையும் கைதான மூவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

**ஆணைக்குழுக்களை...**

“சர்வதேச நீதிக்காகப் போராடி வரும் நாம் பல வருடங்கள் கடந்தும் நீதி மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஏமாற்றத்துக்குள்ளாகி வருகின்றோம். அத்துடன் இலங்கை அரசின் ஆணைக்குழுக்கள் மீதும் அதன் விசாரணைகள் மீதும் நாம் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளோம். இந்த நாட்டில் உள்ளவர்களே போரை உருவாக்கி தமிழர்களை அழித்தார்கள். எனவே, அவர்களால் உருவாக்கப்படும் ஆணைக்குழுக்கள் மீதும் அலுவலகங்கள் மீதும் எமக்குத் துளியும் நம்பிக்கை இல்லை.

இழப்பீடு வழங்குவதும், மரணச் சான்றிதழ் வழங்குவதுமே அவர்களது நோக்கமாக உள்ளது. எமக்கு அது தேவையில்லை. எமது உறவுகளே தேவை. 12 ஆணைக்குழுக்களுக்கு மேல் அமைத்து விட்டார்கள். அனைத்துமே ஏமாற்று நாடகம். எனவே, பிறக்கின்ற புதிய வருடத்திலாவது எமக்கான நீதியை வழங்குவதற்குச் சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.” – என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “12 ஆணைக்குழுக்களுக்கு மேல் ஏமாற்று நாடகம், ராஜபக்ஷ குடும்பம் பேரக் குழந்தைகளைக் கொஞ்சி மகிழும் போது நாம் பேரக் குழந்தைகளைத் தேடி வீதியில் நிற்கின்றோம், குடும்பங்களாகச் சரணடைந்தபோது அவர்களுடன் சரணடைந்த 29 குழந்தைகள் எங்கே?” என எழுதப்பட்ட அரசுக்கு எதிரான பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.




# கல்வி அமைச்சின் நாடக விருது விழா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வி அமைச்சு மற்றும் டவர் அரங்க மண்டபம் இணைந்து நடத்திய நாடக விருது விழா மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சர், செயலாளர், பேராசிரியர் சி. மௌனகுரு மற்றும் அரங்கத்துறை சார்ந்த பலர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இவ்விருது வழங்கும் விழாவில் முதலாம் இடத்தை வவுனியா இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது. இக்கல்லூரிக்குச் சிறந்த மேடை வடிவமைப்பு விருதும், சிறந்த இயக்குனர் விருதும் கிடைத்தன. வி.விஜயகுமா இயக்குநர் விருது பெற்றுக் கொண்டார். சிறந்த துணை நடிகை விருது நிலோஜினி ஜெகதீஸ்வரனுக்குக் கிடைத்தது. சிறந்த தயாரிப்புக்கான முதலிடமும் கிடைத்தது.

இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி பெற்றுக் கொண்டது. இந்தக் கல்லூரிக்கு சிறந்த துணை நடிகைக்கான விருது ஸ்ரீஸ்கந்தராசா ஜதுர்சிகாவுக்குக் கிடைத்தது. சிறந்த நாடக பிரதியாக்கத்துக்கான விருது



ஸ்ரீலேகா பேரின்பகுமாருக்குக் கிடைத்தது. சிறந்த தயாரிப்பில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

மூன்றாமிடத்தைக் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. இந்தக் கல்லூரிக்குச் சிறந்த வேட உடை வடிமைப்பாளருக்கான விருது கிடைத்தது. பா.நிரோஷனுக்கு இந்த விருது கிடைத்தது. சிறந்த நாடக பிரதியாக்கத்துக்கான விருதும் பா.நிரோஷனுக்குக் கிடைத்தது. சிறந்த தயாரிப்பில் 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த ஒப்பனையில் பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவி டிலக்ஷியாவும்,சிறந்த இசையில் நுவரெலியா ஹைலன்ட்ஸ் கல்லூரி மாணவன் சோ.சுந்தர பிரசாந்தும், சிறந்த துணை நடிகராக யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் ஞா.யுவனும், தமிழ் நுவரெலியா ஹைலன்ட்ஸ் கல்லூரி மாணவன் தமிழ்மாறன் றொட்னி மரூசும் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சம்பந்தனின் குளறுபடிகள்

நாளை மறுதினம் புது வருடம் பிறக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் கொஞ்சம் தெம்பாக இருந்திருந்தால் இந்தப் புது வருடத்திற்கு முன்னரும் தீர்வு வருகின்றது எனக் கயிறு ஒன்றை வழமை போல தமிழ் மக்களுக்குத் தந்திருப்பார். அதை விழுங்கிக் கொண்டாவது - நம்பிக் கொண்டாவது - இருந்திருக்கலாம். அதுவும் இம்முறை இல்லை.

2009 மேயில் யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழர் தரப்பின் ஏகத்தலைமைத்துவப் பதவி சம்பந்தனிடம்தான் ஒப்படைக்கப் பட்டது. இந்தப் பதினான்கரை வருடங்களில் அதைப் போட்டடித்து, தமிழர் தரப்பைச் சின்னாபின்னமாகப் பிரித்து, நடுவீதியில் அந்தரிக்க விட்டுச் செல்வதை தவிர வேறு எதையும் அவர் பெரிதாகச் சாதிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இயலாத காலத்திலும் தமிழர்களின் கட்டமைப்பு ரீதியான ஏற்பாட்டை சீர்குலைக்கும் அவரின் எத்தனம் வெளிப்படையாகப் பேசப்பட வேண்டும். விமர்சிக்கப்பட வேண்டும்.

புது வருடத்தில் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு, பொங்கலோடு வழி பிறக்கும் என்று நம்பிக்கைக் கயிற்றைக் கொடுப்பது தப்பில்லை. பேரவலப்பட்டிருக்கும் ஓரினம் நிமிர்ந்து நிற்க முதலில் நம்பிக்கை ஊட்டுவது அவசியம். அதை யாரும் தப்பு என்று கூற முடியாது.

ஆனால் தெரிந்தோ தெரியாமலோ - விரும்பியோ விரும்பாமலோ - தமிழர்கள் தரப்பில் உள்ள கட்டமைப்புகளைச் சீரழித்த பெரும்பழிக்குப் பொறுப்பானவர் சம்பந்தன்தான் என்பதை வரலாறு மறக்கப் போவதுமில்லை; மன்னிக்கப் போவதுமில்லை.

தங்களின் சுயநிர்ணய உரிமை என்ற வரலாற்று கோரிக்கையை 1977 இல் நடந்த பொதுத் தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக கருதி அதன் மூலம் வெளிப்படுத்தினர் தமிழர். அதற்கான ஊடகமாக அமைந்தது தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழர்கள் தரப்புகள் எல்லாம் சேர்ந்து அமைத்த கட்டமைப்பு அது. பின்நாள்களில் தேர்தலுக்காக விடுதலைப் புலிகளாலும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அதுதான்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்டமைப்பைத் தனி மனிதனாக நின்ற ஆனந்தசங்கரியிடம் பறி கொடுத்தவர் யார்? தமிழர் விடுதலைக் கூட்டணியின் முழு ஆதரவாளர்களையும், உறுப்பினர்களையும் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டு, அதனை சட்ட முறைப்படி இயக்கத் தவறியதன் மூலம் அக்கட்சியைத் தனி மனிதரான ஆனந்தசங்கரி வசம் பறிகொடுத்துப் பார்த்திருந்த கூட்டணியின் செயலாளர்நாயகம் சம்பந்தன்தான். நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யக்கூட முயற்சிக்காமல் 'கூட்டணி சங்கரியிடம் போனால் போகட்டும்' என்று மெத்தனமாகப் பார்த்திருந்தவரும் அவரே.

விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்திலும் வழிகாட்டலிலும் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐக்கியம் சிதைந்தழியப் பார்த்திருந்த தலைவர் யார்? இதே சம்பந்தன்தான்.

புலிகள் இயக்கம் அழிந்ததும், அவர் பகிரங்கமாக முதல் சொன்ன படுபொய் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புலிகள் உருவாக்கவில்லை என்ற மோசமான கருத்துதான். அப்போதே கூட்டமைப்பின் கட்டுக்கோப்பு பொய்யில் நிலைநிறுத் தப்பட்டு உடையத் தொடங்கிவிட்டது.

இப்போது இலங்கைத் தமிழர்கள் வசம் பழமையானதாக எஞ்சி இருக்கும் தமிழரசுக் கட்சியையும் பெருந்தலைவர் என்ற அங்கீகரிக்கப்படாத பதவி நிலையில் இருந்து கொண்டு, தான் பிரிய முன்னர் அதனைத் தடை செய்ய வைத்துக் குழப்பிவிட்டுப் போவதற்கு அவர் உள் மனதில் திட்டமிட்டுருக்கின்றார்போல தெரிகின்றது. அவரின் நடவடிக்கைகள் அதனைத்தான் காட்டுகின்றன.

இனங்கள், மதங்களை முன்னிறுத்தும் கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்று தேசியப் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவில் அதன் தலைவர் சரத் வீரசேகர பிரேரணை முன் வைத்திருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்பது அவரது வேணவா. அவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது நாடாளுமன்ற பதிவுகளைப் பொறுத்த வரை இலங்கைத் தமிழரசு கட்சிதான்.

ஐந்து வருடங்களாகக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தாத இலங்கைத் தமிழரசு கட்சியின் பதிவை வழக்குத் தொடுத்தோ, வேறு வடிவில் விண்ணப்பங்கள் செய்தோ தேர்தல் ஆணையத்தில் அதன் பதிவை நிறுத்தவோ அல்லது இடைநிறுத்தவோ செய்யலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகம். தமிழரசுக் கட்சியின் சாதாரண உறுப்பினர் ஒருவர் கூட அதை இலகுவாகச் செய்ய முடியும்.

ஜனவரிக் கடைசியில் நடக்கவிருக்கும் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு ஆப்படிப்பதன் மூலம் அக்கட்சியின் பதிவையும் இடைநிறுத்த வாய்ப்பளித்து, அதைச் செய்ய வைத்த பின்னர்தான் சம்பந்தன் ஓய்வார் போலும்.



# இரத்தினபுரிக்கு விஜயம் செய்த இராமகிருஷ்ண மிஷன் சுவாமி

(வி.ரி சகாதேவராஜா)

இரத்தினபுரி நகரத்துக்குச் சென்ற இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு குருகுல சுவாமி ஸ்ரீமத் நீலமாதவானந்தா ஜீ மகராஜிக்கு நகரில் தமிழின்னியம் முழங்க மரியாதையுடன் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டம் அருள்மிகு ஸ்ரீ ரத்தினபுரீஸ்வரர் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இந்து ஸ்வயம் சேவக குழுவினரின் 130 பெண்களுக்கான முகாமில் கலந்து கொண்டார்.



அங்கு, யுவதிகளை சமுதாயத்தின் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வது என்ற பொருளில் உரையாற்றினார்.

அங்குள்ள மக்களின் பொருளாதார கல்வி மேம்பாடு சம்பந்தமான ஆலோசனை கூட்டத்திலும் பங்கேற்றார்.

# கொழும்பு இராமநாதன் இந்து மகளிரில் ஆறுமுகநாவலரைப் போற்றும் தினம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

செந்தமிழும் சிவநெறியும் போற்றிய நல்லை மண் தந்த ஆறுமுகநாவலர் பெருமானைப் போற்றும் தினம் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

"நாவலர் போற்றரங்கு" என்றும் தொனிப்பொருளில் இது இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி யோகராணி சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் நாவலர் பெருமானைப் போற்றிப் பாடசாலை ஆசிரியரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் இசையரங்காகவும் கவிச் சமர்ப்பணமாகவும் நாடகமாகவும் இடம்பெற்றன.







# அக்கரைப்பற்று வலய மாணவருக்கு காலணி வவுச்சர் வழங்கும் நிகழ்வு

**(எம்.எம்.றம்ஸீன்)**

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள 47 பாடசாலைகளின் மாணவர்களுக்கான காலணி வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ் அஹமட் கியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய காங்கிரஸ் தலைவரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கும் பாடசாலைகளின் அதிபர்களிடமும் காலணி வவுச்சர்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ் சேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா, கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.றஸ்மி, ஏ.எல்.செய்னுடின், ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ. தாஹிர் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜே.எம் வஸீர் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சமகால அரசியல் உரையரங்கு

**31.12.2023 (ஞாயிறு) பிற்பகல் 3.00 மணி**

**வேதபாராயண சனசமூக நிலையம்**

**உப்புமடச் சந்தி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில்**



தலைமையுரை

**திரு. பொ. ஐங்கரநேசன்**

தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்

கருத்துரைகள்

**தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து...**



உத்தேச கடற்சட்டத் திருத்த வரைவு

**திரு. என்.வி. சுப்பிரமணியம்**

தலைவர் - வடமாகாண கடற்றொழிலாளர் இணையம்



புத்தாண்டை எதிர் கொள்ளுதல்

**திரு.நிலாந்தன்**

அரசியல் ஆய்வாளர்



இமாலயப் பிரகடனம்

**பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம்**

துறைத்தலைவர் - அரசறிவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



# சமுர்த்திப் பணிப்பாளருக்கு பிரியாவிடை அம்பாறையில்

(எம்.எம். றம்ஸீன் )

அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ். எம்.சப்ராஸ் புலமைப் பரிசில் பெற்று ஆஸ்திரேலியா செல்வதையிட்டு பிரியாவிடை நிகழ்வு ஒலுவில் கிறீன் வில்லா சுற்றுலா விடுதியில் இடம் பெற்றது. அம்பாரை கரையோர மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களின் ஏற்பாட்டில் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் சாய்ந்த மருது பிரதேச செயலக தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ நஜீம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



# பாடசாலை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எல்.ஓ.எல்.சி. நிறுவனம் இனங்களுக்கிடையிலான நல்லுறவை பேணும் வகையில் நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலம் எனும் தொனிப் பொருளில் “தெவிசவிய” திட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை மூன்றாம் கட்டமாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு எல்.ஓ.எல்.சி.ஹோல்டிங் பிரதித் தலைவர் இஸ்காரா நாணயகார தலைமையில் நடைபெற்றது.

இதன் போது கொழும்பு மற்றும் சுற்றயலைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.










# கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் நீர் மரணங்கள்...!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

"எப்பவரும் எப்படிவரும்னு யாருக்கும் தெரியாது .ஆனால் வரவேண்டிய நேரத்தில் கரக்டா வரும் " என்ற சினிமா வசனம் மனிதர்களுடைய அகால மரணங்களுக்கும் சாத்தியமாகவே இருக்கின்றது.

இலங்கையில் வீதி விபத்துக்களின் மூலமாக உயிரிழப்புகளின் தொகை சடுதியாக அதிகரித்துக் கொண்டு செல்கின்ற நிலையில், சமீப காலமாகக் கிழக்கு மாகாணத்தில் நீரில் மூழ்கி இறப்போரின் தொகையும் அதிகரித்துச் செல்கின்றது.

ஆறு , குளம் , நீச்சல் தடாகம் மற்றும் கடலில் மூழ்கி இறப்போரில் இளைஞர்களின் எண்ணிக்கை சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் நீரில் மூழ்தலுடன் தொடர்புடைய இறப்புகள் மற்றும் நீர்ப்பாதுகாப்பின் தேவை போன்றவற்றின் அடிப்படையிலான அறிக்கையின் படி சர்வதேச அளவில் இலங்கையில் நீரில் மூழ்கி இறப்போரின் தொகை அதிகமாகவே காணப்படுகின்றது.

மது அருந்திக் கொண்டு நீர் நிலைகளில் நீராடச் செல்வது, எச்சரிக்கை அறிவித்தல்கள் அபாயகரமான பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றை எவருமே கண்டு கொள்ளாத உதாசீனப்படுத்தும் நிலைமை போன்றனவும் இதற்குக் காரணமாக அமைகின்றன.

அதிக சந்தோசத்துக்கு ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் கடலில் விடுமுறை நாள்களில் அதிகமானோர் ஒன்று கூடுவது வழமையானது. இதனால் தமது பாதுகாப்பை எவரும் ஒரு பொருட்டாக கவனத்தில் கொள்ளாமையே இவ்வாறான விடயங்களுக்கு பிரதானமான காரணமாக அமைகின்றது.

இலங்கையில் அதிகமான கடற்கரைப் பிரதேசங்கள் காணப்பட்டாலும் அவை யாவும் மக்கள் நீராடுவதற்கு உகந்தைவையாக இருப்பதில்லை. இருந்தும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி , உப்புவெளி , அரிசிக்கடல் , பளிங்குக்கடல், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடா மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அறுகம்பை போன்ற அழகான பாதுகாப்பான கடற்கரைகள் நீராடுவதற்கு உகந்தவையாகக் காணப்படுகின்றன.

நீர் வளத்தைப் பாதுகாப்பது மட்டும் மனிதர்களுடைய கடமையல்ல. அந்த நீர் வளத்தை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது மற்றும் கையாள்வது என்பது தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நீச்சல் மற்றும் நீராடுவதற்கு பொருத்தமற்ற மற்றும் அபாயகரமான பகுதிகளை இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்த வேண்டிய அவசரத் தேவை தற்போது எழுந்துள்ளது.

வெளிப் பிரதேசங்களில் இருந்து கிழக்கு மாகாணத்துக்குச் சுற்றுலா வரும் இளைஞர்கள் குழு மற்றும் குடும்பத்தினர் தாம் நீராடும் இடங்களை அப்பிரதேசத்திலுள்ள மக்களிடம் கேட்டறிந்து கொள்ள வேண்டும். தமக்குப் பரீட்சித்தம் இல்லாத இடங்களில் நீர்நிலைகளின் ஆழம், கடல் அலையின் வேகம், கடல் கொந்தளிப்பு , கால நிலை அவதான நிலையம் விடுத்திருக்கும் அறிவித்தல்களை அறிந்திராமை போன்றனவும் நீரில் மூழ்கி உயிரிழப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

சில சந்தர்ப்பங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் உயிரிழக்கும் சந்தர்ப்பங்களையும் நாம் அறிந்துள்ளோம். ஒரு குடும்பத்தில் பலர் உயிரிழப்பதால் அந்தக் குடும்பம் அனுபவிக்கும் துன்பங்களை எவராலும் தாங்கிக் கொள்ள முடியாது.

குளங்களில் மற்றும் நீர்வீழ்ச்சியில் நீராடும் போது அதன் மேற்பகுதியில் அதிக மழை பெய்யும் வேளையில் அல்லது வான் கதவுகள் திறக்கும் வேளையில் திடீரென்று நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும். அந்த வேளையிலும் திடீர் அனத்தம் ஏற்பட்டு உயிரிழந்தவர்களும் உள்ளனர்.

நீராடும் போது பல பேர் ஒரேயடியாகக் கைகோர்த்துக் கொண்டு நீரில் இறங்குவதாலும், ஒருவர் நீரில் மூழ்கும் போது அவரைக் காப்பாற்ற செல்வதாலும் அதிகமான இழப்புகள் ஏற்படுகின்றன.

இதனால் ஒருவர் இழுபடும் போது சகலரும் நீரின் உள்ளே இழுபட்டு செல்லும் நிலையும் ஏற்படும் , அத்தோடு நீராடும் போது நீருக்குள் தள்ளிவிடுதல், அமிழ்த்தும் செயற்பாட்டை, நீர்நிலைகளுக்கு அருகாமையில் கையடக்க தொலைபேசியில் செல்பி எடுத்தல் போன்ற செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நீர் நிலைகளில் நீராடும் போது மதுபானம் மற்றும் போதைப் பொருள்களைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.எனவே நீச்சலின் போதும் ஏனைய நீர் விளையாட்டுகளின் போதும் பாதுகாப்பான உடைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெரும்பாலானோர் அபாயகரமாக பகுதிகள் என்று அறிந்திருந்தும் ஆறு, குளங்கள், நீர்வீழ்ச்சிகள் போன்ற இடங்களுக்கு நீராடச் செல்வதால் ஒரு சில நிமிடங்களில் தமது வாழ்வை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் அதிகரித்துள்ள இந்தக் காலகட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் மிக அவதானமாகச் செயற்படவேண்டும்.




# மடவளை பஸார் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்குச் சின்னம் சூட்டல்

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

மடவளை பஸார் அல் முனவ்வரா ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி எப்.இஸட். ஹலீல்டீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம் றிஸ்மியும், கௌரவ அதிதியாக சரோ பொறியியல் கட்டட நிர்மாண நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் எம்.பீ.எம்.றமீமும், சிறப்பு விருந்தினராக மதினியன் மாஸ்டர் நலன்புரிச் சங்கத் தலைவர் எம்.எஸ்.எம்.மனாஸிரும் கலந்து கொண்டனர்.



# சோலோ தம்ரோ பிரிவில் சாதனை செய்த மாணவி



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான இசை மற்றும் பாடல் போட்டியில் சோலோ தம்ரோ பிரிவில் கம்பஹா லைசியம் சர்வதேச பாடசாலை மாணவி சசுண்மி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வலய, மாவட்ட மட்ட போட்டிகளில் தொடர் தேர்சியாக முதலாம் இடத்தை இந்த மாணவி பெற்றிருந்தார்.

இந்தப் பாடசாலையில் முதன் முதலாக கீழைத்தேச இசை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒட்டுசுட்டான் பிரதேச குடும்பங்களுக்கு பெரண்டினா நிறுவனத்தால் உதவிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாகப் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 176 குடும்பங்களுக்கு பெரண்டினா நிறுவனத்தால் அத்தியவசிய உலர் உணவுப் பொருள்கள் கடந்த வழங்கப்பட்டுள்ளன.

மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பண்டார வன்னியன், புளியங்குளம்,கருவேலகண்டல், முத்து விநாயகர் புரம், பேராறு போன்ற கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலகர் க.ரவீந்திரன், பெரண்டினா நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் பீ.எம்.றஹீம், கிராம சேவை உத்தியோஸ்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட பெரண்டினா நிறுவன பணியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடி மத்தியஸ்தர் வருடாந்த ஒன்று கூடல்

(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடி பிரதேசத்தில் மிகச் சிறப்பாக இயங்கிவரும் மத்தியஸ்த சபை காத்தான்குடி பிரதேச மக்களின் பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்த்து இணக்கப்பாடு காணப்படும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் மிகவும் இலகுவான முறையில் அவதானமாக நிதானமாக இரு சாராரும் தங்களின் பிணக்குகளுக்குத் தீர்வு காணப்படுவதன் மூலம் சகவாழ்வுக்கு வழி வகுக்கப்படுகிறது.

அங்கத்தவர்களின் ஒற்றுமை கருதி காத்தான்குடி மத்தியஸ்த சபையின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் காத்தான்குடி கடலோரம் பீச் வைட் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடந்த காலங்களில் மத்தியஸ்தர்களாக கடமையாற்றிப் புதிய தெரிவில் இடம் பெறாத மத்தியஸ்தர்களின் சேவை நலன் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.





# மாளிகைக்காடு அல் ஹு சைன் வித்தி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

(எம்.எம்.றம்ஸீன்)

மாளிகைக்காடு அல் – ஹுஸைன் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்க அங்குராப்பணக் கூட்டம் பாடசாலை அதிபர் ஏ.சி.எம்.நளீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக பாடசாலையின் ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளர் ஏ.எல்.எம். ஆரிப் மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



பழைய மாணவர் சங்க தலைவராகப் பாடசாலை அதிபர் ஏ.ஸி.எம்.நளீனும், செயலாளராக ஆர்.எம். தாணிஸ் ரஹ்மதுல்லாஹ்கும் உப தலைவராக எம்.எஸ்.எம்.றிஜாத்தும் உப செயலாளராக ஆர்.எப். சப்னாவும் இணைப்புச் செயலாளர்களாக எஸ்.எம். சம்ருத், ஏ.ஜி.எப். சாஹிதா ஆகியோரும் பொருளாளராக என்.எம்.சஜாத்தும், உப பொருளாளராக ஏ.எப்.என்.ரோஸ்னியும், கணக்காய்வாளராக என்.எம்.இஷாத்தும், நிர்வாக உறுப்பினர்களாக ஏ.எம்.சஜான், ஏ.எம்.எம்.மிம்தாஸ், ஏ.எம்.மபாஸ், ஆர்.அப்ரின், எல்.அமிதா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.



# சாய்ந்தமருது பிரதேச செயலகத்திலிருந்து பதவியுயர்வு பெற்றோருக்குப் பிரியாவிடை

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஸானா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.நபார், கே.ஆதம்பாவர், மாவட்ட செயலகத்துக்குத் தலைமைக் காணி உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற கே.ராபி, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுரேஸ்குமார், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம்.ஹம்சார், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எப்.சகிலா, எம்.எப். றாஜிதா, ஏ.ஆர்.றினோஸா, எஸ்.ஐ. பஸ்மியா ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு பிரதேச செயலக நலன்புரிச் சங்கச் செயலாளர் எம்.ஹுசைன் முபாரக் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், மேலதிக மாவட்ட பதிவாளர் ஐ.எம். பாயிஸ், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், நிதி உதவியாளர் எம்.எஸ்.எம். றியாஸ், பிரிவுக்கான பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# காத்தான்குடியில் பரிசளிப்பு விழா

(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா காத்தான்குடி அல் ஹிறா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பாறூக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.எம்.ஹக்கீம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன் போது பாடசாலையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் இந்த வருடம் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் பாறூக் பிரதி அதிபர் திருமதி முப்லிஹா பிரதௌஸ் உட்பட ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் மன்னார் முசலியில் ஆடுகள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார், முசலி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் ஆடுகள் வழங்கப்பட்டன. இதனை அமைச்சரின் இணைப்பாளர்கள் வழங்கி வைத்தனர்.





# சாய்ந்தமருது கோட்ட கவின் நிலை; வெற்றி ஆசிரியர்களுக்குப் பரிசில்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது கோட்டத்தால் நடத்தப்பட்ட ஆரம்பப் பிரிவு வகுப்பிலுள்ள தரம் 3, தரம் 4 வகுப்புகளுக்கான கோட்ட மட்ட கவின்நிலைப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியைகளுக்கான கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் கேட போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலிக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பி. ஜிஹானா ஆலிப், எம்.எச். ரியாஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.



கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பப் பிரிவுக்கான ஒருங்கிணைப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஏ. மலிக், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மௌலவி ஏ.ஜஹாங்கீர் மற்றும் ஆசிரிய ஆலோசர்களான ஏ. றாசிக், எஸ்.எம்.அன்சார் ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார் நிகழ்வில் கலந்து கொண்டார்.

வெற்றி பெற்ற அனைத்து ஆசிரியைகளுக்கும் அதிதிகளால் கிண்ணம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# ஒலுவிலில் சோள அறுவடை ஆரம்பம்

(அஸ்ஹர் ஆதம்)

ஒலுவில் அஷ்ரப் நகரில் சோள அறுவடை ஆரம்பித்துள்ளது.

கடந்த சில தினங்களாக இங்கு அறுவடை செய்யப்படும் சோளத்தை கொள்வனவு செய்யவும் சோளச் சேனைகளைப் பார்வையிடவும் அதே இடத்தில் இவற்றை அவித்து சாப்பிடவும் இப்பிரதேசத்துக்குப் பெரும் திரளான மக்கள் வந்து செல்கின்றனர்.

இதே வேளை இம்முறை கூடுதலான விளைச்சல் கிடைத்துள்ளது என்றும் இவை நல்ல விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்றும் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் இரு வாரங்களில் இந்த அறுவடை முடிவுக்கு வரும் எனவும் தெரிவித்துள்ளனர்.





# குச்சவெளி மீன்பிடி, விவசாய அபிவிருத்தி; மாவட்ட அரச அதிபர் களத்தில் ஆராய்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளிப் பிரதேசத்தில் காணப்படும் விவசாயம், மீன்பிடி தொடர்பிலான பிரச்சினைகளை ஆராய திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

விவசாய சம்மேளனங்களின் வேண்டுகோளை ஏற்று இந்த விஜயத்தை மேற்கொண்ட மாவட்ட அரச அதிபர் மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இலந்தைக் குளம், குச்சவெளியான் குளம் புனரமைப்பு மற்றும் அனுமதிப் பத்திரமுள்ள வயல் காணிகளை விடுவிப்புச் செய்து தருமாறும் விவசாயிகளால் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மீன் பிடி தொடர்பில் ஜாயா நகர் சல்லி முனைப் பகுதியில் இறங்கு துறை அமைப்பது பற்றியும் மீனவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மகா ஆலங்குளத்தில் இருந்து குச்சவெளி விவசாய செய்கைக்கான நீர்ப்பாசன விரிவுபடுத்தல் நெற்செய்கை நோய் தாக்கம் போன்ற பல விடயங்களை விவசாயிகள் மாவட்ட அரச அதிபரிடம் முன்வைத்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வைப் பெற்றுத் தருவதாக மாவட்ட அரச அதிபர் விவசாயிகளிடத்தில் தெரிவித்தார்.

இதில் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், பிரதேச செயலர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், விவசாய மீனவ சம்மேளனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மகளிர் சங்க அபிவிருத்திக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வரும் மகளிர் சங்கத்துக்கான தளபாடங்கள் உள்ளிட்ட பை உற்பத்திகளுக்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுபடுத்தல் அமைச்சின் மகளிர் பணியகத்தால் "திரியமம் பெத்த" நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் சக்தி மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

மகளிர் சங்கத்தின் உற்பத்தி மூலமாக அவர்களின் சுயதொழிலை விருத்தி செய்யும் நோக்கில் இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பை உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் ஒரு வாய்ப்பாக காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தம்பலகாமம் உதவி பிரதேச செயலர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம். சித்திக், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# அட்டாளைச்சேனை அபிவிருத்தி தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளார் முஷாரப் எம்.பி.

(கே. எ. ஹமீட்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் அபிவிருத்திக்காகத் தன்னால் முடிந்த பணிகளை செய்வதற்கு விருப்பமாக இருக்கின்றேன். அதேபோன்று கடந்த காலங்களிலும் என்னால் முடிந்த வேலைத் திட்டங்களையும் முன்னடுத்திருக்கின்றேன். இவ்வாறு திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கான இணைப்பாளரும், ஊடக செயலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கடற்றொழில், விளையாட்டு, பாதை அபிவிருத்தி மற்றும் கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்காகவும், எழுச்சிக்காகவும் அரசு அடுத்த வருடத்தில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் அவ்வாறான முக்கியத்துவம் மிக்க அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிச்சயம் முன்னடுக்கத் தீர்மானித்துள்ளேன். அதற்காக நீங்கள் எல்லோரும் எனக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

சமூகம் சார்ந்த, நமது பிரதேசம் சார்ந்த பல வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளோம்.

மக்களுக்காக நல்லது செய்ய வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். அதை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் செய்தாலும் அதனை விமர்சிக்கவோ, தடுக்கவோ ஒருபோதும் நாம் முனைந்ததில்லை.

நுரைச்சோலை வீட்டுத் திட்டம் போல புரையோடிக் காணப்படும் பல பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதுதான் எமது ஒரே எதிர்பார்ப்பாகும்.

நாட்டை முன்கொண்டு செல்லப் பொருத்தமான ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை மக்கள் பார்க்கின்றனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும் செல்வாக்குடன் கூடுதல் வாக்குகளைப் பெற்று ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.–என்றார்.

இங்கு, அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பல்துறை அபிவிருத்தி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ் உரையாற்றினார்.கடந்த காலங்களில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முசாரப்புக்கு நன்றியைத் தெரிவித்தார். எதிர்வரும் வருடத்திலும் கூடுதலான செயற்றிட்டங்களை இந்தப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தப் பிரதேசத்தின் பன்முக எழுத்தாளரும், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகருமான எஸ்.எல்.மன்சூர், கணக்காளர் ஏ.ஆர்.கியாஸ்கான், லகுகல பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழீல், மாவட்ட சுகாதார கல்வியதிகாரி எம்.ஜே.எம்.பைறூஸ், அக்கறைப்பற்று பிரதேச சபையின் பிரதம அபிவிருத்தி உத்தியோகத்தரும், மத்திய குழு செயலாளருமான ஏ.எல்.கியாஸ்தீன், ரீ.பீ.ஜயா வித்தியாலய அதிபர் ஓ.எல்.றிஸ்வான், தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பீ.நியாஸ், மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் உப தலைவர் ஏ.பீ.மர்ஜான், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எப்.நவாஸ், நெசவுக் கைத்தொழில் உத்தியோகத்தர் எம்.எல்.எம்.சாதீக், நெற்கதிர் பிரதேச சபை வேட்பாளர் மனாப் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# பாட விதான மற்றும் புறப்பாடவிதான சாதனையாளர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு வலயம் ஒழுங்குசெய் திருந்த 2023 ஆம் ஆண்டில் பாட விதான மற்றும் புறப்பாடவிதான செயற் பாடுகளில் சாதனை படைத்த சாத னையாளர்களை பாராட்டி கௌரவிக் கும் நிகழ்வு பட்டிருப்பு தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீ தரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட 70 பாடசாலைகளில் கல்வி



பயிலும் மாணவர்களிடையே பொதுப் பரீட்சைகளில் சாதனைபடைத்த, சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, தேசிய மட் டத்தில் சாதனை படைத்த, இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் சிறந்த அடைவு மட்டத்தைப் பெறுவதற்கு காரணமாக அமைந்த ஆசிரியர்கள் இந்த நிகழ்வின் போது பாராட்டிக் கௌர விக்கப்பட்டனர்.

# மட்டு. வலயத்தில் புலமைப்பரிசில் மாணவர் பாராட்டிக் கௌரவிப்பு!

(பழுவூரான்)

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்ற மட்டக்களப்பு வலய மாணவர்கள் 352 பேருக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வு மட்டக் களப்பு புனித சிசிலியா தேசிய மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை (28) இடம்பெற்றது.

கல்வித் துறையில் சதனை படைக்க மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு அரச அதிபர் திருமதி. ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாண வர்களுக்கான பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

இதன்போது மட்டக்களப்பு வலயத் தின் 3 கோட்டங்களிலும் உள்ள பாட சாலைகள் மூலமாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற 352 மாணவ, மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.





மட்டக்களப்பு வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், சிறப்பு அதிதியாக திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே. ஞான ரெட்ணமும், கௌரவ அதிதியாக ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இரவிச்சந்திராவும் கலந்து கொண்ட னர்.

# ஜே.என்.1 கொவிட் திரிவுடன் 110 பேர் அடையாளம்!

இந்தியாவின் டில்லி, மஹாராஷ்ட்ரா உள்ளிட்ட 9 மாநிலங்களில் ஜே.என்.1 என்ற கொவிட் திரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது என தெரிவிக்கப் படுகிறது.

இதன்படி, கொவிட்-19 - ஜே.என்.1 திரிவு தொற்றுறுதியான 110 பேர் இது வரையில் அடையாளம் காணப்பட்டுள்ள-னர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இதேவேளை, இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 743 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதும்



தற்போது கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 997 ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதார அமைச்சகம் இன்று தெரிவித்துள்ளது.

கொவிட்-19 தொற்று கடந்த 7 மாதங்களாக அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் நாட்டில் ஏழு இறப்புகள் பதிவாகியுள்ளன. கேரளாவில் மூன்று பேர், கர்நாடகாவில் இரண்டு பேர் மற்றும் சத்தீஸ்கர் தமிழ்நாட்டில் தலா ஒருவர் என மொத்தம் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் முகக்கவசம் அணிதல் மற்றும் சுகாதார நடவடிக் கைகளை கடைப்பிடிக்குமாறு பொதுமக் களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

# ஆளுநரை சந்திக்கிறார் முதல்வர் ஸ்டாலின்!

## - நிலுவை சட்டமூலங்கள் குறித்து ஆலோசிக்க வாய்ப்பு



தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சந்தித்து பேசவுள்ளார் என தகவல் வெளி யாகியுள்ளது. இன்று மாலை ஆளுநர் மாளிகையில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தமிழக சட்டப்பேரவைக் கூட்டம் ஜனவரி மாதம் கூடவிருக்கிறது. இந்தக் கூட்டத்தில் ஆளுநர் உரையும் இடம்பெறவிருக்கிறது. அதன்படி, இதுதொடர்பாக ஆளுநரிடம் ஒப்புதல் பெறும்பொருட்டு ஆளுநர் ஆர். என்.ரவியை சந்திக்க நேரம் கேட்கப்பட்டது. மாலை நேரம் ஒதுக்கப்பட்டதை அடுத்து இன்று மாலை 5.30 மணிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் சந்திக் கின்றார்.

இந்த சந்திப்பின்போது நிலுவையில் உள்ள சட்டமூலங்கள் ஒப்புதல் வழங்க ஆளுநரிடம் வலியுறுத்த வாய்ப்பு உள்ளது. ஏனென்றால், சமீபத்தில் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்களை தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி நிலுவையில் வைத்துள்ளார் என தெரிவித்து தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது.

இந்த வழக்கின் தீர்ப்பில், சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலங்களுக்கு ஒப்புதல் வழங்க ஆளுநர் ரவி தாமதப்படுத்தியது குறித்து கேள்வி எழுப்பிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக வந்த சட்டமூலங்களை திருப்பி அனுப்பிவிட்டு, மீண்டும் பேர வையில் நிறைவேற்றப்பட்டு அனுப்பிய சட்டமூலங்களை ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடியாது என அரசியலமைப்பின் 200 ஆவது பிரிவை சுட்டிக்காட்டினர்.

மேலும், ஆளுநர் ரவி, முதல்வர் ஸ்டாலினை நேரில் அழைத்து சுமுகமாக பேசி இதற்கு தீர்வு காண வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த அடிப்படையில் நிலுவையில் உள்ள சட்டமூலங்கள் தொடர்பாக இருவரும் பேசுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கடந்த பத்து நாட்களுக்கு முன்பு இதே விவகாரம் குறித்து விவாதிப் பதற்காக முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், அப்போது தமிழகத்தில் மழை, வெள்ள பாதிப்புகள் இருந்ததால் அந்தப் பணிகளை பார்வையிடுவதற்காக அப்போது ஆலோசனை நடத்தவில்லை. இந்த நிலையில் தான் இன்று ஆளுநரை சந்தித்துப் பேசவுள்ளார் முதல்வர் ஸ்டாலின். இந்த சந்திப்பு தமிழக அரசியலில் மிகுந்த எதிர்பார்ப்பை உரு வாக்கியுள்ளது.

# பாலத்திற்கு அடியில் சிக்கிய ஏர் இந்தியா விமானம்!

மும்பை அருகே பழுதடைந்த விமா னமான ஏர் இந்தியா ஏ 320 ஐ லொறியில் வைத்து எடுத்துச் சென்றபோது பாலத்தில் திடீரென சிக்கிக் கொண்டதை அடுத்து அங்கு போக்குவரத்து தடைப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளன.

மும்பையில் இருந்து அசாம் மாநி லத்திற்கு பழைய ஏர் இந்தியா விமா



னத்தை லொறியில் வைத்து கொண்டு சென்றபோது பாலத்தின் அடியில் திடீரென விமானம் சிக்கிக் கொண்டது.

இதனால் அந்த பகுதியில் போக்கு வரத்து பாதிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சில மணி நேரம் போராட்டத் திற்கு பின் லொறி மீட்கப்பட்டதாகவும் லொறி சாரதியிடம் விசாரணை நடந்து கொண்டிருப்பதாகவும் தகவல் வெளி யாகியுள்ளது.

# இஸ்ரேல் விமான தாக்குதலில் 11 ஈரானிய தளபதிகள் பலி!





சிரியாவின் டமாஸ்கஸ் சர்வதேச விமான நிலையத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஈரானிய புரட்சிகர காவலர் படையின் 11 தளபதிகள் கொல்லப்பட்டனர் என சவுதி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதல் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயர்மட்ட பிரதிநிதிகளை சந்திப்பதற்காக ஈரானிய புரட்சிகர காவலர் படையின் தளபதிகள் விமான நிலையத்தில் இருந்தனர் என கூறப்படுகிறது.

எனினும் டமாஸ்கஸ் சர்வதேச விமான நிலையத்தில் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என வெள்ளிக்கிழமை வெளியான செய்திகளை ஈரானிய புரட்சிகர காவலர் படையின் செய்தித் தொடர்பாளர் சர்தார் ரம்ஜான் ஷெரீப் மறுத்தார். ஈரானிய ஊடகங்களை மேற்கோள் காட்டி, அத்தகைய கூற்றுக்கள் "ஆதாரமற்றவை" என்று அவர் கூறினார்.

வியாழன் மாலை இஸ்ரேல், தெற்கு சிரியா மற்றும் டமாஸ்கஸ்/க்கு அருகில் உள்ள தளங்களை இரண்டு தனித்தனி அலைகளில் வான்வழித் தாக்குதல்களுடன் குறிவைத்ததாக சிரிய ஊடகங்களும் கூறின.

தாக்குதலின் போது டமாஸ்கஸ் பகுதியில் சிரிய வான் பாதுகாப்புகள் செயல்படுத்தப்பட்டன. இஸ்ரேலால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் வான்வழித் தாக்குதல் "ஆக்கிரமிக்கப்பட்ட சிரிய கோலன் குன்றுகளில்" இருந்து வந்ததாக சிரிய இராணுவ ஆதாரம் ஒன்றை மேற்கோள் காட்டி அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வார தொடக்கத்தில், டமாஸ்கஸ் அருகே கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் ஈரானிய புரட்சிகர காவலர் படையின் மௌசவி கொல்லப்பட்டார். அதற்கு இஸ்ரேல் விலையை செலுத்தும் என ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெறுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசாவில் மேலும் பலர் உயிரிழக்கக் கூடும்! – ஐ.நா எச்சரிக்கை

இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயற்பாட்டால் காசாவில் மேலும் பலர் உயிரிழக்கக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

அத்துடன், காசாவின் தெற்கு பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டடங்கள் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 20 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள பாலஸ்தீனியர்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்கின்றனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, தெற்கு லெபனானில் மேலும் இரண்டு ஹிஸ்புல்லா படையினரின் தளங்கள் தாக்கப்பட்டன என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.



# சீனாவில் புதிய பாதுகாப்பு அமைச்சர் நியமனம்



சீனாவின் புதிய பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் கடற்படைத் தளபதி டாங் ஜுன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குப் பின்னர் புதிய பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் கடற்படைத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பெய்ஜிங்கில் நடைபெற்ற தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழு கூட்டத்தில் இது தொடர்பான நியமனம் சீன நாடாளுமன்ற உறுப்பினர்களால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அதன்படி, எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் புதிய பாதுகாப்பு அமைச்சராக 62 வயதான டோங் ஜுன் பதவியேற்கவுள்ளார்.